சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 23.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | பிரபா |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவர் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வேறு வழக்கில் 3ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து கடந்த 06.08.2022 ஆம் தேதி மாலை 5.41 மணியளவில் தாழைக்குடி கீழத்தெருவை சேர்ந்த ராமசாமி மகன் அ.சா-1 ரவி வயது (52) என்பவரை அவரது சகோதரர் ராஜா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அப்போது அவர் அன்றைய தினம் மாலை 4.44 மணியளவில் அம்மையப்பன் கடை தெருவில் தெரிந்த 2 நபர்கள் கருங்கல்லால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் தலையின் மேல் முன் நடு பகுதியில் கிழிந்த காயம் 6x0.5x0.5 அளவில் காணப்பட்டது. அவருக்கு முதல் உதவி செய்து விபத்து பதிவேடு பதிவு செய்து மேலும் சிகிச்சைக்காக உள்நோயாளிகாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ அதிகாரி அருண்பிரகாஷ் என்பவர் மேற்படி அ.சா-1 ரவி என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது தொடர்பாக அவருக்கு இந்த காயம் சாதாரண காயம் என குறிப்பிட்டு காய சான்றிதழ் வழங்கியுள்ளார். அந்த காய சான்றிதழில் நானும் சான்று ஒப்பம் செய்துள்ளேன். அந்த காய சான்று **அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை விசாரணை செய்த போது அ.சா-1 தாக்கியதாக சொல்லப்படும் கருங்கல்லை காட்டி என்னிடம் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா-1-க்கு இருந்த காயம் பழைய காயமா புதிய காயமா என்றால் புதிய காயம். அந்த காயம் புதிய காயம் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் புதிய காயமாக இருப்பதால் குறிப்பிடவில்லை. பழைய காயமாக இருந்தால் குறிப்பிடுவோம். காயத்தின்

தன்மையை மருத்துவ நிபுணரால் மட்டுமே சொல்லமுடியும் என்றால் தவறு என்னாலும் சொல்ல இயலும். அ.சா-1 இரு சக்கர வாகனத்தில் மது போதையில் செல்லும் போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் அவ்வாறு கீழே விழுந்தால் மேலும் சில காயங்கள் ஏற்பட்டிருக்கும். அ.சா-1 மது போதையில் நிலை தடுமாறி சுவரில் மோதி கொண்டாலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உண்டு.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியாக உள்ளது என்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.23 05:42:44 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.